**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO. 21/2022**

| | |
|---|---|
| Name: முனியம்மாள் | Caste: |
| Father's Name:<br>Husband Name : ராமு | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 21.01.2026 | |

**21.01.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 11.23 AM**

**வா.சா.1 – குறுக்கு விசாரணை**

நான் உத்திரமேரூர் வண்ணார தெருவில் வசித்து வருகிறேன். என்னுடைய கணவர் பெயர் ராமு, என்னுடைய தாயார் பெயர் தேவகி. என்னுடைய தாய் உயிருடன் தான் உள்ளார். அவர் தனியாக வசித்து வருகிறார். எனது தாயார் எனது வீட்டின் பின்பக்கத்தில் உள்ள ஒரு பகுதியில் வசித்து வருகிறார். என்ன பரிகார் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய தாயார் வீட்டை விற்க முயற்சி செய்தார் அதனை தடுக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா வீடு ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் சிவலிங்க மேஸ்திரி பெயரில் இருந்தது. தற்போது என்னுடைய தாயார் அந்த வீட்டை விற்க முயற்சி செய்கிறார். எனது தாயாரை எதிர்த்து காவல் நிலையத்திலோ அல்லது வட்டாசியர் அலுவலகத்திலோ புகார் ஏதேனும் அளித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கை நான் யாருக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய தாயாருக்கு எதிராக தாக்கல்

செய்துள்ளேன். மேற்படி வழக்கில் சார்பதிவாளர் மற்றும் மாவட்ட ஆட்சியரையும் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

எனக்கும் முதல் பிரதிவாதிக்கு மட்டுமே பிரச்சனை இருந்து வரும் நிலையில் 2 மற்றும் 3 ம் பிரதிவாதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தது தவறு என்றால் சரியல்ல. நீதிமன்த்தில் தாவா சொத்தின் பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னர் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**Selvi.R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**உத்திரமேரூர்.**